27.07.2023.

OS.No.118/2021

PW1-மோகன் சற்குணம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.07.2023.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> : ( பிரதிவாதி தரப்பில்)

13. சர்வே எண்.219 ன் மொத்த விஸ்தீரணம் 18 ஏக்கர் 10 செண்ட் என்றாலும், அதில் மேலோரம் 6 ஏக்கர் 5 செண்ட் இடத்தை, 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. சர்வே எண்.219 யை உங்களது தகப்பனார், மீனாட்சியாட்சி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. ராமநாத செட்டியார் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார். இந்த ராமநாத செட்டியார், மீனாட்சியாட்சியின் கணவர் என்றால் சரிதான்.

14. மேற்படி 6 ஏக்கர் 5 செண்ட் இடத்தில் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்று உரிமையும் சேர்த்துதான் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த கிணற்றில் எங்களுக்கும் உரிமை இருக்கிறது. உங்களது தகப்பனார் கிரையம் பெற்ற 3 ஏக்கர் 3 செண்டில் தென்பக்கம் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். இந்த கிணற்றில் உங்களது தப்பனாருக்கும், உங்களது சித்தப்பா தனராஜ்க்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. உங்களது தகப்பனார் கிரையம் பெற்ற 3 ஏக்கர் 3 செண்டிற்கு கீழ்பக்கம் உங்களது சித்தப்பா தனராஜ் கிரையம் வாங்கிய இடம் உள்ளது என்றால் சரியல்ல.

15. 1ம் பிரதிவாதி எதிருரையுடன் 3 கிரைய பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்கள் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியும் என்றாலும், தற்போது தெரியாது என வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. உங்களது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்களை விட கூடுதலாக 92 செண்ட்டை காண்பித்து 8 முதல் 11 அயிட்ட சொத்துக்களாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டு பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் உள்ள கிணற்றில் அவருக்குள்ள உரிமையில் பாதி உரிமையை உங்களது தகப்பனாருக்கு கொடுப்பது குறித்தும், அதைபோல்

உங்களது தகப்பனார் கிரையம் வாங்கிய இடத்தில் உள்ள கிணற்றில் அவருக்குள்ள பாதி உரிமையை 1ம் பிரதிவாதிக்கு கொடுப்பது குறித்தும் ஒரு வாய்மொழியாக ஒப்பந்தம் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

17. மேற்படி வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் உள்ள கிணற்றில் மின் மோட்டார் பொருத்தப்பட்டது என்றாலும், மின் இணைப்பு உங்களது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது என்றாலும் மின் இணைப்பு எனது தகப்பனார் பெயரில் உள்ளது. உங்களது தகப்பனாருக்கு மின் இணைப்பில் இருந்த பாதி உரிமையை 17.02.2006 ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

18. அதனால் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் உ ள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு மற்றும் மின் மோட்டார் ஆகியவற்றில் உங்களது தகப்பனாருக்கு பாதி உரிமை மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல. உங்களது தகப்பனார் கிரையம் வாங்கிய இடத்தில் அவருக்கிருந்த பாதி உரிமையை 1ம் பிரதிவாதிக்கு மாற்றி கொடுத்துவிட்டதால் பிராது 12ம்தபசில் சொத்தை பொறுத்து நீங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

19. நீங்கள் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். காவல்துறையில் நீங்கள் பணிபுரிந்துவருவதை பயன்படுத்தி 1ம் பிரதிவாதியை மிரட்டி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உங்களை மிரட்டியதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதி உண்மையல்ல என்றால் சரியல்ல. உங்களது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தை நியாயமான முறையில் நீங்கள் அனுபவம் செய்வதை 1ம் பிரதிவாதி எப்போதும் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல.

20. 1 முதல்11 தபசில் சொத்துக்களின் உங்களது முழு உரிமையை மறுத்து 1ம் பிரதிவாதி எதிர்வாதம் செய்து வருவதால் இந்த சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரததால் வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது 12ம் தபசில் சொத்தை பொறுத்தும் உங்களது தகப்பனரின் உரிமை மறுக்கப்பட்டிருப்பதால் விளம்புகை பரிகாரம் கோராத இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

21. பிராது 7 மற்றும் 12 அயிட்ட சொத்துக்களான கிணறுகளை பொறுத்தமட்டில் 1ம் பிரதிவாதி ஒருகூட்டு உரிமையாளர் என்பதால் கூட்டு உரிமையாளருகு எதிராக கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 12ம் தபசில் சொத்தான கிணற்றில் உள்ள உரிமையை உங்களது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு மாற்றி கொடுத்துவிட்டதால் இந்த சொத்தை பொறுத்து கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

22. பல்வேறு சொத்துக்களின் வெவ்வேறு விஸ்தீரணங்களை காண்பித்து ஒரே வழக்காக தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**23. மறுவிசாரணை- இல்லை**

ஒம்/- திரு.கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
தென்காசி.